Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu



# ஜுமுஆ பேருரை

## தலைப்பு :

## ரமலானுக்கு பிந்திய காலம்

**-அல்லாஹ் உடைய கலீபாவின் அறிவுரை**


ஹஸ்ரத் முஹையுதின்அல்-கலீப:த்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (AS)


07 June 2019
03 Shawwal 1440 AH

மொழியாக்கம்/Translation

TJSI பத்திரிகை குழுமம்- TJSI publication group


வெளியீட்டு
அமீர்,
ஜமாஅத் தமிழ்நாடு



PHONE:+917502272774
EMAIL:jusai.tn@gmail.com

بسم الله الرحمن الرحيم

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீபத்துல்லாஹ்(AS) அவர்கள் தஷ்ஹுத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதி "**ரமலானுக்கு பிந்திய காலம்-** (அல்லாஹ் உடைய கலீபாவின் அறிவுரை)" என்ற தலைப்பில் ஜுமுஆ பேருரையை தொடர்ந்தார்கள்

நம்மை படைத்து பரிபாலிக்கும் இறைவன் நமக்காக அனுப்பிய ஒரு சிறப்புமிக்க விருந்தினரான ரமலான் நம்மை விட்டுச் சென்று விட்டது. உண்மையில் அருளுக்குரிய ரமலான் மாதம் முடிவடைந்து, வருகின்ற ஓர் புதிய மாதமாகிய ஷவ்வால் மாதம் நம்மிடம் வந்து இருக்கின்றது. இது சிலருக்கு துன்பம்; இன்னும் மற்றும் சிலருக்கோ இன்னும் குறிப்பாக உண்மையிலேயே தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆன்மா(மன நிலை) இல்லாதவர்களுக்கு இந்த (ரமலான்) மாதம் சென்று விட்டதற்காக அவர்கள் நிம்மதி அடைகின்றார்கள் ஏனென்றால் அவர்கள் இதற்கு பிறகு தங்களது பழைய இயல்பு நிலைக்கு திரும்பலாம் என்று மகிழ்ச்சியும் அடைகின்றனர்

ஆனால் ஒரு உண்மையான நம்பிக்கையாளருக்கு இந்த அருளுக்குரிய ரமலான் மாதம் அவரை விட்டு பிரிவது மிகுந்த துக்கத்தை அவருக்கு தருகின்றது என்பதே உண்மையாகும், இருப்பினும் அவரால் இந்த அருளுக்குரிய மாதத்தில் ஆரம்பித்து செய்ய முடிந்த நற்செயல்களை தொடர்ச்சியாக அந்த வருடம் முழுவதிலும் செய்வதற்கான ஒரு அருமையான வாய்ப்பாக அமைகின்றது மேலும் இதன் மூலம் அவர் ,அவரது எல்லா செயல்பாடுகளும், எண்ணங்களும் அல்லாஹ்வை நோக்கியிருப்பதையும் அவனுடைய திருப்தியை அடை(கின்ற) வ(ழிகளில் இருப்ப)தையும் உறுதிசெய்ய முடிகின்றது.

தற்போதைய, அதாவது நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நூற்றாண்டில் இதற்கான நற்கூலி இரண்டு , மூன்று மடங்கு அல்லது அதை விட அதிகமாக கிடைக்கின்றது; ஏனென்றால் **ஒருவர் இறை தூதரை, இறைவனின் கலீஃபாவை , இறைவனால் ரூஹுல் குதுஸ் (பரிசுத்த ஆவி)மூலம் அனுப்பப்படுகின்ற கலீஃபாவை ஏற்றுக்கொள்கின்ற வாய்ப்பினையும் அருளையும் பெறுகின்றார்**, பிறகு அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி ஆகிவிடுகின்றார். இது ஏனென்றால் அவருடைய முழு வாழ்வின் போது, அல்லாஹ்வின் தூதருடைய ஆயுள் காலத்தின் போது, அவர் இந்த சிறப்பிற்குரிய லைலத்துல் கத்ரை(அவருடைய ஆயுளின் நீளத்திற்கேற்ப-இயல்பான அல்லது சராசரி மனித வாழ்வு) பூமியில் பெறுகின்றார். **அவர் இறைவனுடைய மாபெரும் அடையாளங்களுக்கும், அற்புதங்களுக்கும் ஓர் சாட்சியாக ஆகிவிடுகின்றார். இன்னும் அவர் இதன் மூலம், மற்றவர்கள் பெற்றிராத அல்லாஹ்வுடனான ஓர் நெருக்கத்தையும் பெறுகின்றார்**. மேலும்

அவர் இந்த நன்றி தெரிவித்தலை அவருடைய அல்லாஹ்வின் தூதர் உடனான தொடர்பினால், ரூஹுல் குதுஸ் மூலமாக பெறுகின்றார். அவருடைய முழு வாழ்க்கையும் ரமலான் மாதத்தை போன்று மட்டும்மல்லாமல், இன்னும் துல்லியமாக(க் கூறுவதென்றால்) புனித இரவாகிய லைலத்துல் கதர் ஆகவே இருக்கின்றது. மேலும் மிகப்பெரிய லைலத்துல் கதர் ஆனது எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஸஹாபாக்கள் (நபித்தோழர்கள்) பெற்றிருந்தார்கள், இந்த வாய்ப்பானது அவர்கள் அல்லாஹ்வின் புரமிருந்து (தோன்றிய) மாபெரும் தூதரின் காலத்தில் வாழ்ந்திருந்ததால் கிடைத்தது; மேலும் அவரிடத்தில் நேர்மையுடன் இருந்ததால், அவர்கள் உயர்ந்த மரியாதை, இறை அருள் மற்றும் இறை உதவியையும் பெற்றனர், மேலும் இறைவனின் பாதையில் உண்மையான விசுவாசிகளாகவே மரணித்தனர்.அவர்களுக்கு மத்தியில் பல நயவஞ்சகர்களும் கூட இருந்து வந்தனர்.ஆனால் அவர்களுடைய சதித் திட்டங்கள் வீணாகின. மேலும் (இறுதியில்) அல்லாஹ்வும், அவனது தூதரும் மற்றும் உண்மையான இறை நம்பிக்கையாளர்களும் தான் வெற்றி பெற்றனர் வெற்றி வாகை சூடினர்.

இப்போது ரமலான் மாதம் உங்களிடத்தில் வருவதாக வைத்துக் கொண்டால், நீங்கள் உங்களிடத்தில் கேளுங்கள்: நான் அடுத்த ரமலானைப் பார்ப்பேனா? நான் அடுத்த வருடம் அந்த அருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக உயிருடன் இருப்பேனா? இவ்வாறாக இக்காலத்தின் எல்லா மக்களும் மற்றும் இறுதி மார்க்கமான இஸ்லாத்தில் (தோன்றுகின்ற) எல்லா காலத்தின் இறைத்தூதர்களும் அவர்கள் இஸ்லாத்தின், முஸ்லிம்களின் மற்றும் முழு மனித சமுதாயத்தின் சீர்திருத்தத்திற்காகவுமே வருகை தருவார்கள். அவர்கள் நமக்குப் பிறகு (நமது சகாப்தத்திற்கு பிறகு),.மற்றவர்களிடத்தில் (பின்னவர்களிடதில்) அ(ந்த இறை நம்பிக்கையான)து நசுக்கப்படும் போது,(ஈமானை) நம்பிக்கையை புதுப்பிப்பதற்காக வருவார்கள்.எனவே அந்த மக்கள் அல்லாஹ்வின் தூதர்களிடத்தில், இஸ்லாத்தின் தூதர்களிடத்தில் நம்பிக்கைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இன்னும் மனதில் நன்றாக பதிய வைத்துக்கொள்ள வேண்டும் அதாவது அல்லாஹ் அவர்களுக்கு, அவர்களின் வாழ்வின் காலகட்டத்திலேயே/ தற்போது மிகப்பெரிய அருளால் உதவி புரிந்திருக்கின்றான்; அதாவது அவர்களுக்கு ஓர் அல்லாஹ்வின் தூதரை சந்திக்கவும்,அவருடைய வாழ்வின் காலகட்டத்தில் வாழும் சாத்தியத்தையும் அளித்திருக்கின்றான்,ஆனால் அந்தோ (பரிதாபம்!) இந்த மக்கள் என்ன செய்கின்றார்கள்? அவர்கள் தங்களது முதுகுக்குப் பின் திரும்பி விடுகின்றார்கள்! மேலும் எப்பொழுதாவது, அல்லாஹ் மக்கள் மீது அருள் புரிவதற்காக ரூஹுல் குதுஸை அனுப்பியிருக்க, அவர்கள் அவ்விடத்தில் அவற்றை இழந்து (அதாவது) அவர்கள் தங்களது முதுகுகளை அல்லாஹ்விற்கும் அவனது

**தூதருக்கும் (எதிராகத்) திருப்பி விடுகின்ற நிலையில் மரணித்து விட்டால், என்ன நடக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்? அவர்களுக்கு உரிய தண்டனை என்னவாக இருக்கும்! இன்னும் அதிகமாக அவர் அந்த தூதரை ஏளனம் செய்வதோடு, பல வழிகளிலும் அவரை துன்புறுத்துகின்ற அப்படிப்பட்ட ஒரு நபருக்கு அது மிகவும் துரதிஷ்டமானது (பரிதாபத்திற்குரியது).**

ஆனால் அல்லாஹ் புனித திருக்குர்ஆனில் கூறுவது போல:

**"நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான்.."**

**( அல் முஜாதலா 58:22)**

மேலும் அல்லாஹ்வும் இறைநம்பிக்கையாளர்களுக்கு உத்திரவாதம் வழங்குவதாவது தீங்கிழைப்பவர்களுடைய எல்லா திட்டங்களும் இருந்தபோதிலும் அல்லாஹ்வுடைய திட்டமே மிக்க மேலானதாகும்.

அல்லாஹ் அவனுடைய அடியார்கள் மீது கவனம் செலுத்துகின்றான் மேலும் அவர்களுடைய எல்லா வித ஆபத்துகளிலும் தீவினைகளிலும் அவர்களுக்கு உதவி செய்கின்றான். ஆனால் அதே வேளையில் அல்லாஹ் அவர்களை சோதிக்கவும் செய்கின்றான். எனவே ஒரு நம்பிக்கையாளர் எப்போதெல்லாம் சோதனைக்குள்ளாகும் தருணங்களில் அவர் ஒருபோதும் சோர்வடைந்துவிடக்கூடாது. ரமலானின் போது அல்லாஹ்வின் திருப்தியை வெல்வதன் பொருட்டு பல்வேறு பட்ட தியாகங்களையும் செய்வதுப் போல ,அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இறைத் தூதருடைய கால கட்டத்திலும், அல்லாஹ் எல்லா இறை நம்பிக்கையாளர்களையும் அனைத்துவிதமான சோதனைகளை கொண்டும் சோதிக்கின்றான் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.அவன் அவர்களை மரணம்,பயம்,நஷ்டம் மற்றும் அவர்களுடைய செல்வத்தில் சரிவு போன்றவற்றை கொண்டு சோதிப்பான், மேலும் அவன் அவர்களுக்கு அனைத்துவிதமான சோதனைகளையும் கொடுக்கின்றான். அவன் இவை அனைத்தையும் அவர்களுக்கு வழங்குவது, அவர்கள் உண்மையிலேயே அவனுடனும், அவனுடைய தூதருடனும் நேர்மையுடன் நடந்து கொள்கின்றார்களா?, அல்லது அது அவர்களின் வெறும் வாய் அளவிலான வாக்குமூலம் மட்டுமா? என்பதை பார்ப்பதற்காகவுமே ஆகும்.

நான் கூற விரும்புவது:

இறைவன் அவனது அன்பிற்குரிய அடியார்களை அதிகமாக சோதிக்கின்றான் அதிலும் குறிப்பாக இந்த நூற்றாண்டில் அவனுடைய கலீஃபத்துல்லாஹ்விற்கும், கலீஃபத்துல்லாஹ்வின் சஹாபிகளுக்கும் பல சோதனைகளையும் வழங்குகின்றான். அவர்களில் சிலரோ இறை அடையாளங்களை கண்ட பிறகு முன் நோக்கி வருகின்றனர் மேலும் அவர்கள் பைஅத் விண்ணப்பத்தில் கையெழுத்தும் இடுகின்றனர்.ஆனால் அதற்குப் பிறகு என்ன நடக்கின்றது? எதிரிகள் இப்படிப்பட்ட மக்கள் இந்த நூற்றாண்டின் ஆன்மீக வெளிப்பாட்டை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிகின்றப்போது, அவர்களதுத் தலைவர்களைத் திசைத் திருப்புவதற்காக அவர்களிடத்தில் தொடர்ந்து சென்று, பெரியப் பதவிகளாலும் பணத்தாலும் கவரச் செய்து ஆன்மீக வெளிப்பாட்டிலிருந்து அவர்களை வெளியேறச்செய்து அவர்களது முந்தைய நிலைக்கு திரும்ப செய்தோ அல்லது அவர்களுக்கு சிறந்த பதவிகளை கொடுத்து அவர்களை குருடர் ஆக்கி (கண் மூடச் செய்து) விடுகின்றனர். ஸூம்முன் புக்முன் (அவர்கள் செவிடர்கள், ஊமையர்கள், குருடர்கள். ஆகவே அவர்கள் திரும்பமாட்டார்கள்) என்பது போல.

எந்த மக்கள் நம்பிக்கையில் ஈமானில் பலவீனமானவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் அவர்களது வழிகளில் விரைந்து வருகின்ற அவர்களது விருப்பத்திற்கு ஏற்ற இவ்வுலக ஆதாயங்களுக்காக இறைவனின் கயிற்றை எளிதாக விட்டுவிடுகின்றார்கள். எனவே அந்த வகையிலான மக்களின் முடிவு (மிகவும்) வருந்தத்தக்கதாக அமையும். அல்லாஹ் அவர்களைச் சோதித்தான்;அவர்களுக்கு அவனது அடையாளங்களையும் வழங்கியிருந்தான். ஆனால் அவர்கள் நம்பிக்கையை(ஈமானை) நிராகரித்து விட்டார்கள், மேலும் அவர்கள் அவனது கலீஃபதுல்லாஹ்வோடுள்ளத் தொடர்பை முறிக்கின்றார்கள். இதுவே ஓர் 'ஆன்மீக மரணம்' என்று அழைக்கப்படுகின்றது; அதனால் அல்லாஹ் அப்படிப்பட்ட நபரிடமிருந்து எல்லா அருள் வளங்களையும் அகற்றி விடுகின்றான், **மேலும் பூமியில் அவனுக்குரிய தண்டனையானது எதிர்பாராத நேரத்தில் வருகின்றது.மறுமையிலும் அவரது அவல நிலை எல்லாவிதத்திலும் வேதனை அளிக்கக்கூடிய தாக அமையும்**.

ஆகவே ஒவ்வொரு நபரும் குறிப்பாக நம்பிக்கையாளர்கள் மனதில் கொள்ள வேண்டியதாவது:-

நிச்சயமாக எந்த சந்தேகமும் இன்றி வாழ்க்கை முழவதும் உங்களுடன் பயணிக்கும். ஆனால் எவர்கள் நிலைத்து நிற்கின்றார்களோ, அதாவது பொதுவாக கிரியோல் மொழியில் இவ்வாறு கூறுவதுண்டு "**நாம்/அவர்கள் சோதனைகள் முழுவதுமாக சிரமங்களில் சிக்கியிறுந்த போதிலும் உறுதியாகவும், திடமாகவும் நிலைத்துநின்று) , தொடர்ந்து நேர்மையுடன் இருந்தால், பிறகு அல்லாஹ் அவனாகவே அவர்களது வழிகளில் வரக்கூடிய அனைத்து தடைகளையும் அகற்றி விடுவான், மேலும் அவன் அவனுடைய கருணையின் கதவுகளை திறக்கின்றான்;அங்கு நீங்கள் இதற்கு முன்னர் எந்த ஒரு சோதனையாலும் பாதிக்கப்படாதது போல் உங்களது பிரச்சினைகள் வேகமாக ( அற்புதமான வழிகளில்)**

**தீர்க்கப்படுவதைக் காணலாம். இவைகள் தான் அல்லாஹ் அவனுக்காக அவனது வழியில் கடினமாக உழைக்கும் தனது நேர்மையான அடியார்களுக்கு வழங்கும் உதவிகள் ஆகும்.**

ரமலானில் நீங்கள் அல்லாஹ்வே உங்களுக்கு வெகுமதியாகக் கிடைப்பதற்காக நோன்பு நோர்கின்றீர்கள்.தற்போது நினைவில் வைக்கவெண்டியது: **எவர் இறைவனின் தூதரை ஏற்றுக் கொள்கின்றார்களோ, மேலும் இந்த உலகில் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்குரிய வழிகளில், இஸ்லாத்தின் உண்மைக்காக, உண்மை இஸ்லாத்திற்காக அவருக்கு உதவுகின்றார்களோ அவர்களே (இவ்வுலகிலும்) மறுமையிலும் வெற்றி பெறுவார்கள் ;** **அவர்களின் வாழ்நாளில் இப்பூமியில் அவர்கள் செய்த எல்லா தியாகங்களுக்காகவும் அல்லாஹுவையே நற்கூலியாக பெற்றுக்கொள்வதால் அவர்களே (உண்மையில்) அதிர்ஷ்டசாலிகளாவர்.**(ரமலான் மாதத்தைப் போன்றே) அவர்கள் அதிகமான தியாகங்களைச் செய்தார்கள் அல்லது பல விஷயங்களில் இருந்தும் தங்களை விலக்கி வைத்திருந்தார்கள், அதற்குப் பரிகாரமாக அல்லாஹ்வையே (அவர்களுக்குரிய கூலியாகப்) பெற்றுக் கொள்வார்கள்,**இன்ஷா அல்லாஹ்.**

**இப்படிப்பட்ட மக்கள் அனைத்தையும் தியாகம் செய்ய விரும்பியதால் அவர்கள் மீது, அல்லாஹ் அவனது அசாதாரணமான அருள் மழையை இறக்குகிறான் மேலும் அவர்கள் அல்லாஹ்வையே அவர்களுடைய வெகுமதியாக பெற்றுக்கொள்வார்கள். இன்னும் இப்படிப்பட்ட மக்களுக்காக அவர்களுடைய வாழ்வு மற்றும் மரணம் ஆகிய இரண்டிலும் வேறுபாடு இல்லாத வகையில் அதாவது அவர்களது வாழ்நாளிலேயே (அவர்களது நற்கூலியாகப்) அல்லாஹ்வை பெற்றுக்கொள்கின்றார்கள் ,மேலும் அவர்களது மரணத்தின் போதும் கூட அல்லாஹ்வையே (அவர்களது நற்கூலியாகப்) பெற்றுக் கொள்கின்றார்கள்.** இதை போன்ற ஒரு வெற்றி அவர்களுக்கு எவ்வாறு கிடைத்தது?, எனது அருமையானவர்களே! அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்படிவதன் காரணமாக! அல்லாஹ் எந்த ஒருவர் மீது ரூஹுல் குதுஸை(பரிசுத்த ஆவியை) இறக்கி பலப்படுத்தி அவனுடைய தூதராக எழுப்பினானோ அவரை பின்பற்றினார்கள் என்பதால் மட்டுமே.

ஆக இதுவே ஒரு நம்பிக்கையாளரின் வாழ்வில் ரமலான் மற்றும் லைலத்துல் கதர் உடைய மதிப்பாகும். இத்தகைய நேரம் (ரமலான்) சாதாரணவே அதனுடைய எல்லா முக்கியத்துவத்தையும் பெற்றிருக்கின்றது, இருப்பினும் அல்லாஹ்வின் ஒரு தூதருடைய வாழ்வின் (காலகட்டத்தின்) போது, அல்லாஹ் அதனால் அவருடைய பார்வையாகவும் (பார்ப்பதற்குறிய கண்களாகவும்), அவருடைய கைகளாகவும், அவருடைய காதுகளாகவும். ஆகிவிடுகிறான்.அவனே அல்லாஹ், அவன் தான் அவரைக் கட்டுப்படுத்தவும்,வழிகாட்டவும் செய்கின்றான். ஆகவே இந்த அருட்கொடைகள் ஆயிரக்கணக்கான மடங்காக அதன் மதிப்பு பல்வேறு வழிகளிலும் தொடர்ந்து அதிகரிக்கப்படுகின்றது இன்னும் அதன் மதிப்பு எல்லா

வழிகளிலும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.மேலும் இது நடக்கும் பொழுது, அத்தகைய ஒரு சகாப்தத்திற்கு சாட்சியாக இருப்பவர் மற்றும் **அல்லாஹ்விற்காக அவனது தூதரை ஏற்றுக்கொண்டும், அவனது தூதருக்கு உதவி செய்து கொண்டும் இருக்கின்ற அந்த ஒருவர் உண்மையிலேயே மிகவும் அதிர்ஷ்டசாலியாகவும் அருளுக்குறியவராகவும் ஆகிவிடுகின்றார்**.

எனவே, ரமலானைப்பற்றி நான் ஏற்கனவே கூறியது போன்று ,ஒரு நம்பிக்கையாளர் ரமலானுக்குப்பிறகும் கூட (ரமலானின் போது உருவாக்கிய) அவரது நல்ல பழக்கவழக்கங்களை தொடர வேண்டும். ரமாலானுக்குப் பிந்தைய இ(க் காலகட்டத்)திலும் ரமலான் உங்களுக்கு ஒரு சிறைச் சாலையாக இருந்ததா? அல்லது ஒரு உண்மையான கருவூலமாகவும் உங்களை சீர்திருத்துவதற்கு ஒரு வாய்ப்பாகவும் அல்லாஹ்வின் பாதையில் நடப்பதற்குறியதாகவும் இருந்ததா? என்பதைப் பார்ப்பதற்காகவும் அல்லாஹ் உங்களுடைய நேர்மையை கண்காணிப்பான்.

மேலும் ஒரு நம்பிக்கையாளர் எப்போதும் இவ்வாறு நினைவில் கொள்ளவேண்டும்: அதாவது ஒருவேளை **இது என்னுடைய கடைசி ரமலானாக இருக்குமானால் என்ன(ஆகும்)?** அதற்காக அவர் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டியதாவது :மரணம் தவிர்க்க இயலாததும், நிகழபோவதும், அந்த நபர் (மரணித்து இவ்வுலகை விட்டுப் பிரிவதற்காக) நிரணயிக்கப்பட்டுள்ள அந்த நேரம் காத்துக் கொண்டிருப்பதுமாகும். நீங்கள் அதனை விரும்பலாம் அல்லது விரும்பாமலும் இருக்கலாம்,ஆனால் அனைத்து மக்கள் மீதும் மரணம் விதிக்கப்பட்டுள்ளது. நாம் அனைவருமே இந்த உலகை விட்டு ஒரு நாள் பிரிந்தாக வேண்டும்.

**அல்லாஹ்(சுபஹூனா),(இந்தப்) பூமியின் (மீதான) நமது வாழ்வில் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதையே எப்போதும் நம்மிடம் அறிவுறுத்தி இருக்கின்றான். எனவே, உங்கள் அன்றாட வாழ்வில் ஒரு முழுமையான மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்ற திடநம்பிக்கையில் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நபரும் தன்னை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும்.அவர் ஆயிரம் கேள்விகளைக் கேட்க முடியும், ஆனால் பெரும்பாலான நேரங்களில் அவற்றிற்கான விடைகள் அவரிடமே காணப்படுகின்றன.அவர் செய்த செயல்களையும்,அவைகளை எந்த நோக்கத்திற்காக அவர் செய்திருந்தார் என்பதையும் அவர் மட்டுமே அறிந்தவராவர்,மேலும் என்ன (விளைவுகளும்) வரலாம்,(ஆனால்)அவர் ஒரு நாள் அல்லாஹ்வின் முன் இவை அனைத்திற்கும் உரிய கணக்கை சமர்ப்பிக்க வேண்டி இருக்கும்.இன்னும் அவர் அல்லாஹ்வின் முன் தனியாக இருப்பார். மேலும் அவர் மட்டுமே அல்லாஹ்வின் முன் தனியாக (நின்று கொண்டு) இருப்பார்.வேறு எவருமே இருக்க மாட்டார்கள்(மற்ற எந்த சக மனிதர்களும் இருக்க மாட்டார்கள்) .அவர் மற்றவர்களின் எந்த உதவியும் இல்லாமல் தன்னைத் தானே தற்காத்துக் கொள்ள வேண்டியிருக்கும். அங்கு அவருக்கு உதவ எந்த ஒரு தந்தையோ, தாயோ அல்லது வேறு எந்த மக்களும் அவருடைய உதவிக்காக வர மாட்டார்கள்.**

**எல்லா(க் காரியங்களும் அந்நாளில்) அல்லாஹ்வுக்கும் அவருக்கும் இடையில் மட்டுமே நடை பெறும்.**

ஹஜ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களின் உம்மத்திலுள்ள ஒவ்வொரு முஸ்லிம்களும் கல்விக்கூடத்தில் கற்பது போல, அதாவது நம்பிக்கையின் (ஈமானின்) கல்விக் கூடத்தைப் போல ரமலான் மாதத்தில் கற்ற ஆன்மீக தரத்தையும் அதன் உண்மையான பிரதிபலிப்புகளுடன் சரியானதொரு மாற்றத்தை (தங்களிடம்) உருவாக்கிக்கொண்டால், , ஒரு ஆன்மீக இடைவெளி ஏற்படும்போதும் (அந்த ஆன்மீகத் தரத்தின் மூலம்)அவர் தனது வாழ்நாள் முழுவதையும் வளப்படுத்திக் கொள்ள முடியும்,பிறகு அது(அவருக்குத்) தானாகவே ஒரு வெற்றியாகி விடுகின்றது… உண்மையில் அது அவர் தனது வாழ்க்கையை சீர்திருத்துவதன் மூலம் பெற்றுக்கொள்கின்ற ஒரு மிக அழகிய வெற்றியாகும்.(அவர் அதனை) சிறப்பான வழிகளில் வடிவமைப்பதன் மூலம் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக்குரிய ஒரு சிறந்த தயாரிப்பாக (அந்த வெற்றியை பெற்றுக் கொள்கிறார்). இன்ஷா அல்லாஹ்.

பிறகு உம்மத்தின் ஒவ்வொருவரும் , முந்தைய தலைமுறைகளும்,புதிய தலைமுறைகளும் நாளையத் தலைமுறைகளும் முழுமையான உறுதி நம்பிக்கைக் கொண்டிருப்பார்கள் மேலும் தங்களுக்குள் கூறுவார்கள்: **"இப்பொழுதிலிருந்து எனது ஒவ்வொரு நாள் வாழ்வும் எனது ரமலான் மாத வாழ்வைப் போன்று இருக்கும்".** பிரார்த்தனையுடனும், நற்செயல்களுடனும், சுய கட்டுப்பாட்டுடனும் எல்லா விதமான தீமைகளிலிருந்தும், அல்லாஹ்விடமிருந்து நம்மை விலக்குகின்ற விஷயங்களில் இருந்தும் விலகி இருப்பதன் மூலம் (இவ்வாறு கூறுவார்கள்).அல்லாஹ்வின் கீழ்ப்படிதலில் நிலைத்திருப்பதற்கும்,அவனுடைய எல்லாக் கட்டளைகளை பின்பற்றுவதற்கும் நீங்கள் அனைவரும் அவனது வழியில் பணியாற்ற தயாராகவும், ஒரு முழுமையான இஸ்லாமிய வாழ்க்கையை வாழவும் வேண்டும். நீங்கள் அல்லாஹ்விடமிருந்து தங்களை தூரமாக்கி வைத்துள்ள நிராகரிப்பாளர்களின் நடைமுறைகளையும், புதுப் பாணிகளையும்/ பழக்கவழக்கங்களையும் பின்பற்றக் கூடாது. அதற்கு மாற்றமாக, அவர்களுக்கு அல்லாஹ்வின் வழியைக் காட்டுவதும், அவர்களது தவறான வழிகளிலிருந்தும் செயல்களிலிருந்தும் நல்லவர்களாக்க அவர்களுக்கு உதவி செய்வதும் உங்களுடைய கடமையாகும்.

**நோன்பு ரமலான் மாதத்தில் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட ஒன்றல்ல. அதை போன்றே எந்த ஒரு நல்ல செயல்களும் நல்ல பணிகளும் நோன்பும் முஹம்மதிய உம்மத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக மாறவேண்டும் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள் எனது அருமையானவர்களே!**

நமது அன்பிற்குரிய பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு வாரத்தின் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் நோன்பு நோற்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் ஒவ்வொரு மாதத்தின் 13,14 **மற்றும்** 15 ஆம் நாட்களில் (சந்திர மாத கணக்கின் அடிப்படையில்) நோன்பு நோற்றார்கள். இன்னும் அன்னார் முஹர்ரம்(ஆஷுரா) நோன்பு,(ஹஜ்ஜு சமயத்தின்)

அர஀பா நோன்பு மற்றும் ஷவ்வால் மாதத்தின் 6 நாள் நோன்புகளையும் நோற்க பரிந்துரையும் செய்துள்ளார்கள்.

ரமலானுக்குப் பிறகு நமது வாழ்வானது சைத்தானின் எண்ணம் மற்றும் விருப்பங்களால் நிரம்பி விடக்கூடாது. மாறாக நாம் அந்த புனித மாதத்தின் முதல் பிறையை கண்ட அந்த நொடிப்பொழுதே நமது செயல்கள் எவ்வாறு இருந்தது நாம் நம்மை பிரார்த்தனை (தொழுகையில்)யிலும், அனைத்து விதமான (இபாதத்) வணக்கச்செயல்களிலும் அர்ப்பணித்திருந்தோம். நாம் நேர்வழியில் நிலைத்து நிற்பாதற்காக (மிக அதிகமான) முயற்சிகளை செய்திருந்தோம்; மேலும் ஆண்களோ அல்லது பெண்களோ நமது ஆடை விஷயத்தில் (பர்தா போன்ற) கண்ணும் கருத்துமாக இருந்தோம்.அதைப்போன்றே நமது பிந்திய (ரமளானுக்கு) வாழ்வானது நல்லவற்றின் (நன்மையின்) தொடர்ச்சியாக இருக்க வேண்டும்,

ரமளானுக்கு பிந்திய காலம் நம் ஒவ்வொருவருக்கும் கேளிள்களையும் பிரதிபலிப்புகளையும் கொண்டுள்ளது. **இந்த பௌதீக வாழ்வானது மிகக் குறுகிய காலம் மட்டுமே. எது நடந்தாலும், எந்த விதிவிலக்கும் இல்லாமல் நாம் அனைவருமே அல்லாஹ்விடம் திரும்பிச் செல்வோம். எனினும் நமக்கு வரும் அனைத்து விதமான சோதனைகள் நம்மை பாதிக்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில்** நாம் நமது நம்பிக்கையில் உறுதியாகவும் பொறுமையுடனும் இருக்கும் வரையில் அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையை ஒருபோதும் இலக்கமாட்டோம். பிறகு அல்லாஹ் அவனாகவே அனைத்து துயரங்களையும் நீக்குவதோடு, நம்மை ஒளியை நோக்கி வழி காட்டுகின்றான். மேலும் நமக்கு ஆதரவாக அல்லாஹ் தன்னையே வெளிப்படுத்திக்காட்டுகின்றான், இதிலும் முக்கியமாக அவன் நம் பக்கம் இருப்பதை நமக்கு உணர்த்தியவாறு , நமக்கு எது நன்மையோ அதன் பக்கமாக நம்மை வழிநடத்துகின்றான்

ஆகவே, நாம் அல்லாஹ்விடத்தில் (உறுதியான) நம்பிக்கை வைப்பதை கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நன்மையின் பக்கம் தொடர்ந்து முன்னேறுபவர்களாகவும் அல்லாவிடத்தும் அவனது இக்கால கலீ஀பதுல்லாஹ்விடத்தும் ஒன்றி இருக்கவேண்டும். **இந்த நேரத்தில் நான் உங்களுக்கு ஒரு சிறிய அறிவுரை கூறுகின்றேன் அனைவரும் நன்றாக மனதில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்: நீங்கள் இந்த ஈடுஇணையற்ற அருளை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள், மேலும் நீங்கள் உங்கள் முதுகுக்குப்பின்னால் திருப்பி கொள்ளாதீர்கள் ஏனென்றால் மீண்டும் இந்த அருளை உங்களால் உங்களின் தனிப்பட்ட முறையில் அடையவே முடியாது நாம் ஏன் தனிப்பட்ட முறையில் என்று கூறினேன் என்றால் உங்கள் வாழ்கை இந்த பூமியில் ஒரு வரையறுக்க பட்டது எனவே இப்படிப்பட்ட ஒரு சகாப்தத்தை மீண்டும் உங்களால் காணவே முடியாது எனது அன்பிற்குறியவர்களே! ஆனால் நாளை உங்களது குழந்தைகள் அதற்கு சாட்சி அளிப்பார்கள். உங்களது குழந்தைகள் மட்டுமல்ல, உங்களது பேரக்குழந்தைகளும், மற்றும் உங்களது பேரக் குழந்தைகளின் பிள்ளைகளும் கூட (அதற்கு சாட்சியம் அளிப்பார்கள்). அது இவ்வாறும் இருக்கலாம் அதாவது இன்று**

**நீங்கள் உண்மையை நிராகரித்துக் கொண்டிருக்கலாம், ஆனால், நாளை உங்களது குழந்தைகள் உங்களைப் போன்று இருக்க மாட்டார்கள். அவர்கள் (அதன்) உண்மையை கண்டறிந்து ஏற்றுக் கொள்ளவதன் மூலம் அந்த ஆன்மீக அருள்களை பெற்றுக்கொள்ளலாம். நிச்சயமாகவே அல்லாஹ்விடத்தில் இவை அனைத்தும் சாத்தியமானதாகும். இன்னும் கூறுவதென்றால் அவன் ஒரு கல்லைப்போன்று கடின இதயம் உடையவரை கூட மாற்றி அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் அன்பால் நிறைத்துவிடுவான் மேலும் ஹஜ்ரத் உமர்(ரலி) அவர்கள் போன்று இதற்கு முன்னர் ஒரு மிக கொடிய எதிரியாக இருந்தவர் கூட, அல்லாஹ்வின் பாதையில் மிகப் பெரிய உதவியாளராக மாற்றிவிடவும் முடியும். அல்லாஹ் எதனை நாடுகின்றானோ அதனைச் செய்கின்றான்,அவன் எவருக்கும் கணக்குக் கொடுக்க வேண்டிய எந்த அவசியமும் அவனுக்கு இல்லை.**

அல்லாஹ் நமது வாழ்வை இவ்வுலகிலும், மறுமையிலும் சிறந்த மற்றும் நிலையான வாழ்வைக்கொண்டு மாற்றம் செய்வானாக! மேலும் நாம் ரமலானின் போது பெற்றுக்கொண்ட நல்லப் பழக்கங்களை தொடரச் செய்வோமாக! அதனால் நாம் அல்லாஹ்வின் அருள்களைக் கொண்ட வெற்றியை நோக்கி நடைபோட முடியும்.

**இன்ஷா அல்லாஹ்.ஆமீன்.**